# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் • திருவள்ளுவர் ஆண்டு 2053 • ஜனவரி 1 2023 | Weekly E-paper • January 1, 2023





# பாஜகவை எதிர்த்து
# 3 மாநாடுகளும் 1 ஆர்ப்பாட்டமும்

**வரலாற்றுத் திரிபுகள், சுட்டிக் காட்டும் தளபதி!**

மதிவாணன்

**2024இல் மங்கு சனிதான்!**

தலையங்கம்

**“ராமர் பாலம்” தலை தொங்கிய பா.ஜ.க**

சாரதாதேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● ஜனவரி 1 2023 Weekly E-paper ● January 1, 2023


# பாஜகவை எதிர்த்து 3 மாநாடுகளும் 1 ஆர்ப்பாட்டமும்

31.12.2022 அன்று சென்னை, தேனாம்பேட்டை, அன்பகத்தில் நடைபெற்ற திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள் :

### தீர்மானம் 1

சமூக நீதிக்கு எதிரான, பார்ப்பனர்களுக்கான இட ஒதுக்கீட்டைக் கண்டித்து 22-01-2023 ஞாயிறு அன்று, கோவையில் ஒரு மாநாடு நடத்தப்படும்.

### தீர்மானம் 2

தமிழ்நாடு சட்டமன்றத்தால் நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்தியும் , சனாதனப் பிற்போக்குக் கருத்துகளைப் பரப்பியும், சமூக ஒற்றுமையைச் சீர்குலைக்கும் வகையிலும் செயல்பட்டு வரும் தமிழ்நாடு ஆளுநர் போக்கைக் கண்டித்தும், இந்தித் திணிப்பை எதிர்த்தும், சேதுக் கால்வாய்த் திட்டத்தை மீண்டும் தொடங்கக் கோரியும் 28-01-2023 அன்று திருச்சியில் ஒரு மாபெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.

### தீர்மானம் 3

மத வெறியர்களால் படுகொலை செய்யப்பட்ட தேசத்தந்தை காந்தியாருக்கு 30-01-2023 அன்று சென்னையில் வீரவணக்கப் பொதுக்கூட்டம் நடைபெறும். அதில் பங்கேற்று உரையாற்ற பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் அழைக்கப்படுவார்கள்.

### தீர்மானம் 4

மதமாற்றத் தடைச் சட்டம், பொது சிவில் சட்டம் ஆகியனவற்றைக் கொண்டு வர முயற்சி செய்யும் இந்திய ஒன்றிய அரசின் பாசிச, சர்வாதிகாரப் போக்கை எதிர்த்து, வரும் பிப்ரவரி மாதம் 19ஆம் தேதி வேலூரிலும், பிப்ரவரி மாதம் 26ஆம் தேதி தூத்துக்குடியிலும் இரண்டு மாநாடுகள் நடத்தப்படும்.






### தீர்மானம் 5

வெளிமாநிலத் தொழிலாளர்கள் அவரவர் இருந்த இடத்தில் இருந்தே வாக்களிக்கும் நடைமுறையை செயல்படுத்துவது குறித்து ஆர்.வி.எம் முறை (ரிமோட் மின்னணு வாக்குப்பதிவு முறை) அரசியல் கட்சிகளின் கருத்தைக் கேட்கத் தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.

இதில் தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் இந்த முயற்சியை எதிர்த்திட வேண்டும் என்றும், யாராகிலும் அவரவர் இருப்பிடம் சென்றே வாக்களிக்கும்படி செய்ய வேண்டும் என்றும் இக்குழு அனைத்துக் கட்சிகளையும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

### தீர்மானம் 6

தமிழ்நாட்டு அரசின் நலத்திட்டங்கள் அனைவருக்கும் சரியான அளவில் சென்று சேரும் வகையில் மக்கள் ஐடி என்கிற அடையாள அட்டை வழங்குவதாகத் தமிழ்நாடு அரசு எடுத்திருக்கிற நடவடிக்கையை இச்செயற்குழு பாராட்டி வரவேற்கிறது. மேலும், இந்த அடையாள அட்டையை எக்காரணம் கொண்டும் வெளி மாநிலத்தைச் சேர்ந்த எவருக்கும் வழங்கிவிடக் கூடாது என்றும், இது விசயத்தில் தமிழ்நாடு அரசு மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும் என்றும் இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

### தீர்மானம் 7

புதுக்கோட்டை மாவட்டம் வேங்கைவயல் கிராமத்தில் பட்டியல் சமூக மக்களுக்கு எதிரான வன்கொடுமைச் செயலை இச்செயற்குழு வன்மையாகக் கண்டிக்கிறது. இவ்விசயத்தில் உடனடி நடவடிக்கை மேற்கொண்ட தமிழ்நாடு அரசையும், பட்டியல் சமூக மக்களைக் கோவிலுக்குள் அழைத்துச் சென்று தீண்டாமைக் கொடுமைக்கு எதிராக, உறுதியான நடவடிக்கையை மேற்கொண்ட மாவட்ட ஆட்சியர் கவிதா ராமு, மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் வந்திதா பாண்டே ஆகியோரையும் இச்செயற்குழு உளமாறப் பாராட்டுகிறது.

●

# வரலாற்றுத் திரிபுகள், கவனம்!
# சுட்டிக் காட்டும் தளபதி!

**மதிவாணன்**

சென்னையில் நடைபெற்ற இந்திய வரலாறு காங்கிரஸ் 81ஆவது ஆண்டு மாநாட்டில், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி ஸ்டாலின் அவர்கள், “இன்று நாடு எதிர்கொள்ளும் ஆபத்து வரலாற்றுத் திரிபு” என்று பேசியிருப்பது ஆழ்ந்த கவனத்திற்கு உரியது.

குகைகளில் மனிதன் தன் கையில் அகப்பட்டவைகளை வைத்துத் தன் சிந்தனை ஓட்டங்களுக்குத் தக்கவாறு கோடுகளை இட்டபோது, மனித குல வரலாறு அதனுடன் தொடங்கியது. ஒரு நிகழ்வு பதிவு செய்யப்படுகின்ற போது அது வரலாறாய் மாறுகிறது. ஆக ஒரு செய்தியை, நிகழ்வைப் பதிவு செய்வது, எவ்வளவு முக்கியம் என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

வரலாறால் என்ன பயன்? கடந்த கால நிகழ்வுகள் எப்படி நிகழ்காலத்திற்கு வழி வகுத்துள்ளன, என்பதை அறிவதன் மூலம், தவறுகளைத் திருத்திக்கொண்டு எதிர்காலத்தை



அமைக்க முயல்வதே வரலாற்றின் முதன்மையான நடைமுறைப் பயன்பாடாக இருக்க முடியும்.

இப்படி ஒரு பயன்பாட்டை வரலாற்றில் இருந்து பெறவேண்டுமானால், கடந்த காலங்களைப் பக்கச்சார்பு இல்லாமல் அதை அணுக வேண்டும். இல்லாவிட்டால் திரிபுவாதத் தவறுகள் வரலாற்றில் நிலைபெற்று, எதிர்காலத்திற்கு எந்தப் பயனும் அளிக்காத வெற்றுப் பக்கங்களாகவே இருக்கும். திரிபுகள் இன்னும் மோசமான விளைவுகளை ஏற்படுத்தி, வீழ்ச்சிக்கு வழிவகுத்து விடும்.

நாட்டின் வரலாற்றைப் பார்ப்பனிய வரலாறாக, பார்ப்பனீயத்திற்குச் சார்பாக மாற்றிப் பிழையாகத் திருத்தி எழுதத் துடிக்கும் இந்துத்துவாவாதிகள் சூழ்ந்துள்ள நிலையை இன்று பார்க்கிறோம்.

இளைஞர்களுக்குப் பிழையாய் கடந்த காலங்களைக் கற்பிப்பதன் மூலம், தாங்கள் விரும்பும் மோசமான எதிர்காலத்தைக் கட்டமைக்க எண்ணுகின்றார்கள் அவர்கள். இத்திரிபுகள் நாட்டிற்கும், நாட்டின் வளர்ச்சிக்கும் ஒருபோதும் பயன் கொடுக்காது.


இது ஒருபுறம் என்றால், ஒருவர் தமிழ்ப் பேரரசுகளின் காலம் பொற்காலமாக விளங்கியது என்று கூறினார். அது அவரின் பார்வை. ஆனால் அவரின் கூற்றில் சில மாறுபாடுகள் இருக்கின்றன. வேளாண் நிலத்தை நம்பி வாழ்ந்த வேளாண் தமிழர்களிடம் இருந்து விளைநிலங்களைப் பிடுங்கி, பார்ப்பனர்களுக்குத் தானமாக, இறையிலி நிலங்களாக அளித்தது சோழப் பேரரசு என்பது வரலாறு. சான்றுகளோடு வரலாறு பேசப்பட வேண்டும். வரலாறு என்பது வேறு, வரலாறு போன்ற புனைச் சுருட்டுக் கதைகள் வேறு. வரலாறு உண்மையாக இருக்க வேண்டுமா அல்லது புனைச் சுருட்டாக இருக்க வேண்டுமா?

மகாபாரதம், இராமாயணம் போன்றவற்றை வரலாறாக உலகம் ஏற்குமா? ஏற்கனவே மறைக்கப்பட்ட வரலாற்று உண்மைகளை வெளிக்கொண்டு வரவேண்டும் என்று எண்ணுகையில் பார்ப்பனீயம் தங்கள் பெருமைகளைக் கூற இது போன்ற பல புனைச் சுருட்டுகளை வரலாறாக மாற்றியமைக்கும் வேலையைச் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறது. வரலாற்றில் திரிபு என்பது மிக ஆபத்தானது.

இதுபோன்ற சூழ்நிலையில்தான் முதலமைச்சர் தளபதி அவர்கள், கற்பனைக் கதைகளைச் சிலர் வரலாறாகச் சொல்லி வருவதையும், அறிவுமிக்க சமுதாயம் அதனை ஏற்றுக் கொள்ளாது என்றும் எடுத்துக்காட்டியதோடு, இன்று நாட்டைச் சூழ்ந்துள்ள ஆபத்து என்பது இந்த வரலாற்றுத் திரிபுதான் என்றும் அடையாளம் காட்டியுள்ளார்.

தளபதியின் வரலாறு குறித்த வழிகாட்டுதல், நாட்டிற்கு மிகத் தேவையானது.

வரலாற்றுத் திரிபுகளை, புனைச் சுருட்டுகளைக் கண்டு அவைகளைக் களையெடுக்க வேண்டும். அறிவியல் முறைப்படி ஆராய்ந்து, உண்மை வரலாற்றை எழுதுவோம், எதிர்காலம் பயன்பெற! ●




23.12.2022 அன்று இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம் சார்பில் நடைபெற்ற பேராசிரியர் அன்பழகனாரின் புகழ்வணக்க நிகழ்ச்சியில் (Twitter space), நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி. கே. எஸ். இளங்கோவன் உரையாற்றினார்.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## 2024இல் 'மங்கு சனி'தான்!



வரஇருக்கும் 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் கோவை, நீலகிரி உள்பட 25 நாடாளுமன்றத் தொகுதிகளில் பா.ஜ.க வெற்றிபெறப் போவதாக நம்ம அண்ணாமலை சொல்லிக் கொண்டு இருக்கிறாராம்.

மிச்சமிருக்கும் 15 தொகுதிகளை அவர் ஏன் விட்டு விட்டார் என்று தெரியவில்லை.

இதில் ஜே.பி.நட்டா கொங்கு மண்டலத்தின் எல்லா தொகுதிகளையும் கைப்பற்றப் போவதாக 'தமாஷ்' காட்டியிருப்பதாகத் தகவல்.

ஏன், சட்டமன்றத் தேர்தலில் 234 தொகுதிகளிலும் கூட பா.ஜ.கவே வெற்றி பெறலாம். கேள்வி என்னவென்றால், அக்கட்சிக்கு மக்கள் வாக்களிப்பார்களா என்பதுதான். கனவு காண்பது அவரவர் விருப்பம்.

தி.மு.கழகம் குடும்பக் கட்சியாம், சொல்கிறார் நட்டா. யார் இல்லை என்று மறுப்பார்கள்? திராவிட இயக்கம் என்பதே எங்கள் குடும்பம்தான்.

தி.மு.க மக்களுக்கும், தமிழ் மொழிக்கும் ஒன்றுமே செய்யவில்லை என்று இவர்கள் கோவையில் பேசியிருக்கிறார்கள்.

அதை மக்கள் சொல்ல வேண்டும். சொல்லப் போனால் பா.ஜ.க அரசு தமிழ் நாட்டைப் புறக்கணிக்கிறது என்பதுதான் உண்மை.

மாநில அரசு, ஒன்றிய அரசுடன் போராடிப் போராடியே நலத்திட்டங்களைப் பெற வேண்டி இருக்கிறது.

தமிழ்நாட்டில் ரயில்வேயில், வங்கிகளில், ஒன்றிய அரசு நிறுவனங்களில் தமிழர்கள் புறக்கணிக்கப் படுகிறார்கள் என்பது நட்டாவுக்குத் தெரியாதா?

தமிழர்களிடம் தாய்மொழியில் படியுங்கள் என்று சொல்லி, ஆங்கிலத்தை அகற்றிவிட்டு இந்தி, பிறகு சமஸ்கிருதத்தைக் கொண்டு வரத்துடிப்பது அண்ணாமலைக்குத் தெரியாதா?

குறித்துக் கொள்ளட்டும் பா.ஜ.க. 2024ஆம் ஆண்டு தேர்தலில் அக்கட்சியை மக்கள் தோற்கடிப்பார்கள்.

சங்கிகள் மொழியில் சொன்னால் 'மங்கு சனி'தான்!

## திராவிட நட்புக் கழகம் நினைவேந்தல்








கன்னியாகுமரியில் 26-12-2022 அன்று திராவிட நட்புக் கழகம் சார்பில், 26-12-2004 ஆம் நாள் ஏற்பட்ட சுனாமியால் உயிர் இந்தவர்களுக்கான நினைவேந்தல் பேரணி தலைமை ஒருங்கிணைப்பாளர் ஆ. சிங்கராயர் தலைமையில் நடைபெற்றது.

ஆசிரியர்: **சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்: **எழில். இளங்கோவன்**

உதவி ஆசிரியர்கள்:
**உதயகுமார், வெற்றிச்செல்வன், சாரதாதேவி**

**வெளியீடு:**
**திராவிட இயக்கத் தமிழர் பேரவை**

இணையதளம்
**www.keetru.com, www.karunchattaibooks.com**

மின் அஞ்சல்: **karunchattai@gmail.com**

டுவிட்டர்: **suba_vee**

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு, ரங்கராஜபுரம், கோடம்பாக்கம், சென்னை - 600 024,தொலைபேசி: 044-2472 6408

# “ராமர் பாலம்” தலை தொங்கிய பா.ஜ.க

சாரதாதேவி

22 டிசம்பர், 2022 அன்று மாநிலங்கள் அவையில் உறுப்பினர் கார்த்திகேய ஷர்மா "இராம சேது" பாலம் குறித்த கேள்விக்குப் பதிலளித்த அறிவியல் தொழில்நுட்பத் துறையின் இணை அமைச்சர் ஜிதேந்திர சிங், 18,000 ஆண்டுகளுக்கு முன்பான ஒரு வரலாறு என்பதால், அறிவியல் பூர்வமாக எந்த மாதிரியான கட்டுமானம் மன்னார் வளைகுடாவிற்கும், இந்தியாவுக்கும் இடையே இருந்தது என்பதை நிறுவ முடியவில்லை என்று கவலையோடு தெரிவித்திருக்கிறார். கட்டுமானம் ஒன்று இருந்திருந்தால்தானே சொல்வதற்கு? 18000 ஆண்டுகளுக்கு முந்தைய மனித வரலாற்றுக்குத் தரவுகள் ஏது? அதில் இராமர் வேறு!






செயற்கைக்கோள் ஆராய்ச்சியின் பயனால் சில சுண்ணாம்புத் திட்டுகள் இருப்பதையும், அது தொடர்ச்சியாக இருப்பதையும் கண்டுபிடித்து இருக்கிறார்கள். இதைப் புதிதாகக் கண்டுபிடித்ததைப் போல பெருமை பட்டிருக்கிறார் அமைச்சர். இனி எப்போதும் இதை விடப் பெரிதாக அவர்கள் எதையும் கண்டுபிடித்துவிடப் போவதில்லை.

ஏன் எனில் தீவுகள், தீபகற்பங்களுக்கு இடையே இதுபோன்ற மணல் திட்டுகள் இயற்கையாகவே இருக்கும். மன்னார் வளைகுடாவில் இருப்பதைப் போல ஆஸ்திரேலியா கண்டத்தின் கிழக்கே இது போன்று பாலங்கள் நீண்ட நெடிய தூரத்திற்கு இருக்கின்றன. அவைகளையும் இராமர் கட்டினாரா என்று பேராசிரியர் தமயந்தி இராஜதுரை என்பவர் கேள்வி எழுப்பியிருக்கிறார். அமெரிக்காவின் 'நாசா' விண்வெளி ஆய்வு மையத்தின் அதிகாரி மைக்கேல் பிரவ்கசு, "விண்வெளியிலிருந்து எடுக்கப்பட்ட எந்தவொரு புகைப்படத்திலும் இராமாயணத்தில் கூறப்பட்டுள்ளபடி மனிதர்களால் கட்டப்பட்ட எந்த ஒரு பாலமும் அந்த இடத்தில் இல்லை. அதற்கான எவ்விதமான ஆதாரமும் இல்லை" என்று கூறியுள்ளதாக முரசொலியில் 29.12.2022 அன்று கட்டுரை தீட்டியுள்ளார் கவிஞர் தமிழ்தாசன்.

நாசாவை மிஞ்சிய ஆய்வுகளைச் செய்து ஒருபோதும் இவர்கள் இராமர் பாலம் இருந்ததை நிறுவப் போவதில்லை. கற்பனைகளை வளர்த்துக் கொண்டே இருக்கலாம். அதன் மூலம் சேது சமுத்திரம் திட்ட நிறைவேற்றத்தைத் தள்ளிப் போட்டுக் கொண்டே இருக்கலாம்.

தமிழ்நாட்டின் தனுஷ்கோடிக்கும், இலங்கையின் தலைமன்னாருக்கும் இடையே 57 கி.மீ. தொலைவு மட்டுமே இருக்கக்கூடிய மணல் திட்டுகளால், கடல் ஆழம் 10 அடிகள் மட்டுமே உள்ளது. அதனால் தூத்துக்குடித் துறைமுகம் மற்றும் மேற்கிலிருந்து வரக்கூடிய கப்பல்கள் இலங்கையைச் சுற்றி வந்தே கீழை நாடுகளுக்கு சரக்குகளை எடுத்துச் செல்ல இயலும். மணல் திட்டுகளைத் தூர் வாரி, கடலை 12 மீட்டர் ஆழப்படுத்தினால், ஏறக்குறைய 350 கடல்மைல்கள் கப்பல் போக்குவரத்தில் குறையும். 44 விழுக்காடு எரிபொருள் சேமிப்பு, நேர சேமிப்பின் காரணமாக கப்பல் வர்த்தகம் பெருகி, அந்நியச் செலாவணி அதிகமாகி நாட்டின் வருவாயில் 10 விழுக்காடு அதிகரிக்கும் என அந்தத் திட்ட அதிகாரிகள் கணக்கிடுகிறார்கள். எதிர்காலத்தில் இந்த வருவாய் இன்னும் அதிகரிக்கவே வாய்ப்புகள் உள்ளன.

1860இல் பிரிட்டிஷ் அரசால் இந்தத் திட்டம் முன்மொழியப்பட்டது. அப்போது அதன் திட்டச் செலவு ரூ.9 கோடிகள் மட்டுமே. அதிலிருந்து 1922 வரை எட்டு முறை குழுக்கள் அமைத்தும் திட்டம் நிறைவேறப்படவில்லை. விடுதலைக்குப் பின் மீண்டும் அந்தத் திட்டம் தூசி தட்டி எடுக்கப்பட்டதிலிருந்து தமிழ்நாட்டுத் தலைவர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தியும், எந்த முன்னேற்றமும் இல்லை. 2005 இல் மன்மோகன் சிங் ஆட்சி அமைந்தபோது, கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற டி.ஆர்.பாலு அவர்கள் கலைஞரின் அறிவுரையை ஏற்று வேகமாகச் செயலாற்றத் தொடங்க, சில கி.மீ. தூரப் பணிகளே எஞ்சியிருந்த நிலையில், 2007ஆம் ஆண்டு சுப்ரமணிய சுவாமி மற்றும் ஜெயலலிதா ஆகியோரால் வழக்கு போடப்பட்டு, இந்தத் திட்டம் முடக்கப்பட்டது.

அதுவரை ஆதம் பாலமாக இருந்த அந்தத் திட்டுகள் "இராமர் பாலம்" என புதிய பெயர் பெற்றன. பா.ஜ.க.வின் முரளி மனோகர் ஜோஷி என்ற பார்ப்பனரும் இவர்களோடு இணைந்து கொண்டார். அதன் பிறகு தடை விலக்கப்பட்டு, உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடரும் நிலையிலும், 2011இல் மாநிலத்தில் ஆட்சி மாற்றத்தால், அந்தத் திட்டம் மீண்டும் கைவிடப்பட்டது.

இந்தப் பின்னணியில்தான் தற்போது மாநிலங்களவையில் இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் நிச்சயமாக எந்தத் தகவலையும் சொல்ல இயலவில்லை என, கை விரித்திரிக்கிறார். சத்தீஸ்கர் மாநில முதல்வர் பூபேஷ் பாகல் பா.ஜ.க. அரசு இதுவரை இந்தத் திட்டத்தை முடக்கி மக்களைக் குழப்பி வந்ததற்கு மன்னிப்புக் கேட்க வேண்டும் என முழங்கி உள்ளார்.

வட அமெரிக்காவையும் தென் அமெரிக்காவையும் இணைக்கும் பனாமா கால்வாயைப் போல, ஐரோப்பிய நாடுகளையும் ஆசிய நாடுகளையும் இணைக்கும் சூயஸ் கால்வாயைப் போல மனித உழைப்பால் உண்டாகப் போகும் ஒரு மாபெரும் வர்த்தக இணைப்புதான் சேது சமுத்திரக் கால்வாய்! தமிழர் மட்டுமல்ல மானுடத்தையே தலைநிமிர விடாத பார்ப்பனிய சூழ்ச்சியை, அதன் உள்ளும், புறமுமாகத் தோலுரிப்போம். சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றுவது தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு மட்டுமல்ல, இந்திய நாட்டின் வருமானத்திற்கும், இந்தியாவின் கடல் மேலாண்மைக்கும் இன்றியமையாததாகும். அதுவே கலைஞரின் கனவும் ஆகும்! ●

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian